www.tamilmirror.lk
# தமிழ்Mirror
FRIDAY, FEBRUARY 09, 2024
வெள்ளிக்கிழமை பெப்ரவரி 09, 2024 | ஒளி: 09 கதிர்: 190 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணாமல்

# “முன்னேற்ற முடியாது”



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கை பிரகடன உரையில் ‘இனப்பிரச்சினைக்குத் தீர்வு’ என்ற ஒரு வார்த்தை கூடக் கிடையாது. பேச்சுவார்த்தைகள் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்று கூறுவதனை பழக்கமாகக் கொண்டுள்ள ஜனாதிபதி. தற்போது அத்தனையும் கைவிட்டுள்ளார். நாட்டின் பொருளாதார பாதிப்புக்கு அடிப்படை காரணியாக உள்ள தமிழ்த் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் ஒருபோதும் நாட்டை முன்னேற்ற முடியாது என்று தெரிவித்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையை நாங்கள் நிராகரிக்கிறோம் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# நீல மாணிக்கக் கற்களை விற்க முயன்றோர் கைது

ரூ.370 மில்லியன் பெறுமதியான இரண்டு நீல நிற மாணிக்கக் கற்களை விற்பனை செய்ய முயற்சித்த, பௌத்த தேரர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொஸ்லந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிக்கு வெலிவேரிய பிரதேசத்தில் வசித்துவருவதோடு, மற்றைய சந்தேக நபர்கள் 72 வயதுடையவர் எனவும், அவர், பிரபல அரசியல் கட்சியொன்றின் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

# கெஹலியவுக்கு ஒட்சீசன்: இந்திய மருந்து மட்டுமே



சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு மருந்துகளுக்கு அப்பால் ஒட்சீசன் வழங்கப்படுகின்றது என சிறைச்சாலைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

“அவர் அமைச்சராக இருந்த போது, இந்தியாவில் உள்ள நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருந்தே அவருடைய நோய்க்கு, வழங்கப்படுகின்றது” என்றார்.

சிங்கப்பூரில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள், கெஹலியவுக்கு வழங்கப்படுவதாக வெளியான செய்திகளை ரணசிங்க மறுத்துள்ளார்.

ரம்புக்வெலவுக்கு 7 நோய்கள் உள்ளன என்பது வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான், சிறைச்சாலை வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கெஹலியவுக்கு இரவு வேளைகளில் ஒட்சீசன் வழங்கப்படுகின்றது. அதற்கான வசதி அவருக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

70 வயதான அவருக்கு இரத்த அழுத்தம்,நீரிழிவு நோய் உள்ளிட்ட பல நோய்கள் உள்ளன. எட்டு அல்லது ஒன்பது நோய்களுக்கு குளிசைகள் வழங்கப்படுகின்றன.

தொடர்ச்சி P2



# விமல் அணியின் எம்.பியாக ஜகத் பியங்கர பதவிப்பிரமாணம்

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யாக ஜகத் பியங்கர சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

பாராளுமன்றம் வியாழக்கிழமை (08) காலை 9.30 மணியளவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோதே ஜகத் பியங்கர பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டார்.

தொடர்ச்சி P2

# “சில குறைகளுக்காக தீயிலிட முடியாது”

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் ஒருசில குறைபாடுகள் உள்ள தற்காக முழுச் சட்டத்தை யும் தீயிலிட முடியாது. அத்துடன், பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தை கேள்விக்குள்ளாக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு கிடையாது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றம் வியாழக்கிழமை (08) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.



தொடர்ச்சி P2

# 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முஸ்தீபு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கு 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை முன்னெடுக்க பல்வேறு தரப்புக்களும் தீர்மானித்து உள்ளன.

வலி.வடக்கு பிரதேசத்தில் இன்னமும் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாமல் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் நிலையில், காணிகளை விடுவிக்குமாறு, காணி உரிமையாளர்களால் பல வருடங்களாக கோரிக்கை முன் வைக்கப்பட்டு

தொடர்ச்சி P2

ஜனாதிபதி தேர்தலில்

# “நிச்சயம் வெல்வார் முதலில் கலைப்பார்”



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நிச்சயம் வெற்றிப்பெறுவர் எனத் தெரிவித்துள்ள, ஜே.வி.பியின் பிரதான செயலாளர் டில்வின் சில்வா, ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டதன் பின்னர், முதலில் பாராளுமன்றத்தை கலைத்து, பொதுத் தேர்தல் நடத்துவார் என்றார்.

களுத்துறையில் இடம்பெற்ற மீனவ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இந்தியா செல்கிறார் சஜித்?



எதிர்க்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும், இந்தியாவின் உத்தியோகபூர்வ அழைப்பு கிடைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழு, இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்திக்கும் அவ்வாறான அழைப்பொன்று இந்தியாவினால் விடுக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

அதனடிப்படையில் இந்தியாவினால், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்துக்கும் அழைப்பு விடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தெற்காசியாவிலேயே

# இலங்கைதான் அதிக மின்சார கட்டணத்தை வசூலிக்கிறது




தெற்காசிய பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை மக்கள் சராசரியாக 2.5 இருந்து 3 மடங்கு அதிகமாக மின்சார கட்டணத்தினை செலுத்துகிறார்கள் என்று புதிய பகுப்பாய்வில் சுட்டிக்காட்டுகிறது.

தொடர்ச்சி P2

# வஜிரவின் ஆசை



ஒரு வருடமும் எட்டு மாதங்களில் நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு சென்ற ஜனாதிபதிக்கு பன்னிரெண்டு வருடங்கள் நாட்டை ஒப்படைத்தால் ஆசியாவின் சக்திவாய்ந்த நாடாக மாற்றுவது ஒரு சிறிய விடயம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

செல்லும் பாதை தெளிவாக இருந்தால் வேறு பாதைகளைக் காட்டி மக்களைத் தவறாக வழிநடத்துவது தேசத்திற்கு எதிரான பாவமாகும் என அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் வியாழக்கிழமை (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நிகழ்நிலை காப்புச் சட்டம்

# “வியாக்கியானங்களை புறக்கணித்தே நிறைவேற்றம்”

அரசியலமைப்புக்கு முரணான செயற்பாட்டுக்கு சபாநாயகர் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் .உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களைப் புறக்கணித்தே நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) விசேட கூற்றை முன்வைத்த போதே இவ்வாறு வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "முன்னேற்ற முடியாது"

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான முதலாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது கொள்கை பிரகடன உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் பாராளுமன்றத்துக்கு வருகை தந்து 'இனப்பிரச்சினைக்கு உடனடியான தீர்வு காண்போம்,நீங்கள் தயாரா,நீங்கள் தயாரா என பெயர் குறிப்பிட்டு வினவினார்.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப்பகுதியில் 3 தடவைகள் சர்வக்கட்சி கூட்டத்தை நடத்தி 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அறிவித்தார்.

76ஆவது சுதந்திர தினமும் கொண்டாடப்பட்டது,ஆனால் கொள்கை பிரகடனத்தின் இனப்பிரச்சினை பற்றி அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

சர்வக்கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்த போது, இது வெறும் வாக்குறுதிகள் மாத்திரமே மக்களாணை இல்லாத நிலையில் ஏதும் செய்ய முடியாது. இனப்பிரச்சினைக்கு தீர்வை எதிர்க்கும்

**மாகாண சபைத் தேர்தல் குறித்து தனிநபர் பிரேரணையை முன்வைத்துப் பல யோசனைகளை முன்வைத்துள்ளேன். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு மாத்திரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் மீது ஒருபோதும் நம்பிக்கை வைக்க முடியாது**

போலி பெரும்பான்மையுள்ள தரப்பினரை வைத்துக் கொண்டுள்ள ஜனாதிபதியால் தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாது என்று குறிப்பிட்டோம்.

அத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுவார்த்தையில் நாங்கள் கலந்துகொள்ளவில்லை, தடையாகச் செயற்பட்டோம் என்று எவரும் குறிப்பிடக் கூடாது என்பதற்காகக் கூட்டங்களில் பங்கேற்றோம். என்பதையும் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட்டோம். ஆனால் எவ்வித முன்னேற்றமும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை.

அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் எமது கட்சியின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதியை பார்த்து 'இந்த கூட்டத்தில் எடுக்கப்படும் ஒரேயொரு முடிவு தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டார். அது என்னவென்று ஜனாதிபதி கேட்ட போது, சம்பந்தன், "அடுத்த கூட்டத்துக்கான திகதியை தீர்மானிப்பது" என்று பதிலளித்தார்.

கூட்டங்களை நடத்தி பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு காண்போம் என்று குறிப்பிடுவதை மாத்திரம் பழக்கமாகக் கொண்டுள்ள ஜனாதிபதி குறிப்பிடப்பட்ட விடயங்களை மறுதலிக்கும் வகையில் கொள்கை பிரகடன உரை ஆற்றியுள்ளார்.

தமிழ்த் தேசிய பிரச்சினை இந்த நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு அடிப்படை காரணியாக உள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பின் ஊடாக தீர்வு காணாமல் ஆயுதம் ஊடாக தீர்வு வழங்குவதற்காகக் கடன் பெற்று பொருளாதார பாதிப்பை அரசாங்கமே தோற்றுவித்தது .

உண்மையை மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மக்கள் விழிப்புடன் தக்க பதிலளிக்க வேண்டும். தமிழ்த் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்குவது மாத்திரம் அரசாங்கத்தின் பிரதான வெற்றியாக உள்ள நிலையில், ஜனாதிபதி தனது கொள்கை பிரகடன உரையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டதாக வெற்றி வார்த்தைகளைக் குறிப்பிட்டார். ஆனால், உண்மையில் எவ்வித முன்னேற்றமும் இதுவரை எட்டப்படவில்லை.

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். தேர்தல்களை நடத்தும் திகதியை ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. இது ஜனநாயக நாடே தவிர சர்வாதிகார நாடல்ல, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது நிதி விடுவிப்பை ஜனாதிபதி தடுத்தார். அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

இதனை வன்முறையான செயற்பாடு என்றே குறிப்பிட வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து தனிநபர் பிரேரணையை முன்வைத்துப் பல யோசனைகளை முன்வைத்துள்ளேன். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு மாத்திரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் மீது ஒருபோதும் நம்பிக்கை வைக்க முடியாது என்றார்.

# வஜிரவின் ஆசை

திருடர்கள், திருடர்கள் எனக் கூறிக்கொண்டு திருடர்களைக் கூப்பிட்டுத் திருடர்களைப் பிடிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்றும், சட்ட விதிகள் தேவை என்றும் கூறிய அபிவர்தன, ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஊழல் தடுப்புச் சட்டம் தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார்.

ஊழலைக் கட்டுப்படுத்த வருமான வரி எண் மிகவும் முக்கியமானது என்றும் சட்டவிரோத பணப் பயன்பாடு நிறுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

# 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முஸ்தீபு

வருவதுடன், காணி விடுவிப்பு போராட்டங்களையும் பல்வேறு தடவைகள் முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் , யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கு என 500 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அதில் , விடுவிக்கப்பட்டு , மக்கள் மீள் குடியேறிய காணிகளையும் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குரும்பசிட்டி, கட்டுவான் மற்றும் குப்பிளான் வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள காணிகளும் சுவீகரிக்கப்படவுள்ளன.

அதில் மக்கள் மீள் குடியேறியுள்ள காணிகளும் உள்ளடங்கியுள்ளன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் , அந்த கிராம அமைப்புக்கள் அண்மையில் கூடி ஆராய்ந்து , தமது காணிகளைச் சுவீகரிக்கும் திட்டங்களை முன்னெடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என , முதல் கட்டமாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட செயலர் ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுப்பது என தீர்மானித்துள்ளனர்.

# கெஹலியவுக்கு ஒட்சீசன்: இந்திய மருந்து மட்டுமே

சிறைவாசம் அனுபவித்து வரும் அத்தகைய நோயாளியின் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு அரசும் பொறுப்பு என்பதால், கைதிகளின் நிலை என்னவாக இருந்தாலும், மருத்துவச் சிகிச்சை தேவைப்பட்டால், மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று மருத்துவர் கூறினார்.

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் 145 படுக்கைகளில் 380 நோயாளர்கள் இருப்பதாகவும் அங்கு 200 சதவீதம் நெரிசல் அதிகமாக இருப்பதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.

அங்குள்ள நோயாளிகள் அனைவரும் விசேட பிரமுகர்கள் அல்ல என்றும், மருத்துவச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களுக்குச் சிகிச்சை அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

# "நிச்சயம் வெல்வார் முதலில் கலைப்பார்"



அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக தெரிவுச் செய்யப்பட்டதன் பின்னர், தற்போதைய பாராளுமன்றத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு அவருக்கு விருப்பமில்லையென தெரிவித்த டில்வின் சில்வா, பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார் என்றார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சகல ஆய்வுகளின் பிரகாரம், அனுராகுமார திஸாநாயக்க, ஜனாதிபதியாக தெரிவாவது உறுதியாகிவிட்டது என்றார்.

# "வியாக்கியானங்களை புறக்கணித்தே நிறைவேற்றம்"

உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் தான் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தின் பெரும்பாலான சரத்துக்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும் அத்துடன் 16 மற்றும் 19 ஆவது சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளது..

சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைக்கும் வியாக்கியானங்களை முறையாகச் செயற்படுத்த வேண்டியது பாராளுமன்றத்தின் கடமை. ஆனால், அரசியலமைப்புக்கும், உயர்நீதிமன்றத்துக்கும் அப்பாற்பட்ட வகையில் ஆளும் தரப்பினரது ஆதரவுடன் இந்த சட்டமூலம் சட்டவிரோதமாகச் சட்டமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சபாநாயகர் மீதான நம்பிக்கை மலினப்படுத்தப்பட்டுள்ளது.

**சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைக்கும் வியாக்கியானங்களை முறையாகச் செயற்படுத்த வேண்டியது பாராளுமன்றத்தின் கடமை. ஆனால், அரசியலமைப்புக்கும், உயர்நீதிமன்றத்துக்கும் அப்பாற்பட்ட வகையில் ஆளும் தரப்பினரது ஆதரவுடன் இந்த சட்டமூலம் சட்டவிரோதமாகச் சட்டமாக்கப்பட்டுள்ளது**

அரசியலமைப்புக்கு முரணான செயற்பாட்டுக்குச் சபாநாயகர் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். சட்டமூலம் மீதான இறுதி விவாதத்தின் போது நாங்கள் வாக்கெடுப்பு கோரினோம். ஹெட்செட்டை காதில் அணிந்து கொண்டு நாங்கள் கூறுவது கேட்காதது போல் இருக்கும் புதிய பழக்கத்தைச் சபாநாயகர் தற்போது கடைப்பிடிக்கிறார் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டதற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆகவே இதில் என்னைத் தொடர்புப்படுத்த வேண்டாம் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், சட்டமூலம் மீதான இறுதி விவாதம் இடம்பெற்றபோது, நீங்கள் தான் சபைக்குத் தலைமை தாங்கினீர்கள், அரசியலமைப்புக்கு முரணான செயற்பாட்டுக்கு நீங்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் குறைபாடுகள் உள்ளன என்பதை நீதியமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே, உடனடியாக விசேட கட்சித் தலைவர் கூட்டத்தைக் கூட்டி கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும் என்றார்.

# இலங்கைதான் அதிக மின்சார கட்டணத்தை வசூலிக்கிறது

இலங்கையின் முதல் தர பொருளியல் நுண்ணறிவு தளமாகிய வெரிட்டே நிறுவனத்தின் publicfinance. lk வெளியிட்ட பகுப்பாய்வு அறிக்கையின்படி, தற்பொழுது தெற்காசியாவிலே அதியுயர் மின்சார கட்டணம் இலங்கையிலே உள்ளது. தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை மக்கள் சராசரியாக 2.5இருந்து 3 மடங்கு அதிகமாக தமது மின்சார கட்டணங்களைச் செலுத்துகிறார்கள்.

மேலும், இத்தளத்தில் 2024 இன் ஆரம்பத்தில் உள்ளூர் மின்சார பாவனையாளர்கள் 100,200 மற்றும் 300 அலகுகளை நுகரும் பொழுது மின்சார கட்டணம் எவ்வாறு அறவிடப்படுகிறது என்பதனையும் பகுப்பாய்வு செய்கிறது.

இதன் கணக்கீட்டின்படி வழங்குநரின் உற்பத்தி செலவு மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் மேலதிகமாக அமுல்படுத்தபட்டுள்ள சமூகப் பாதுகாப்பு வரி உட்படுத்தப்பட வில்லை.

இலங்கைக்கு அடுத்து தெற்காசியாவின் உயர் மின்கட்டணம் வசூலிக்கும் நாடாக பாகிஸ்தான் காணப்படுகிறது. பாகிஸ்தானுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை மக்கள் 100

**இலங்கை மின்சார சபை மக்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம் மற்றும் திறைசேரியிலிருந்து பெறும் மானியம் மூலமும் தனது உற்பத்தி செலவினை சமப்படுத்துமென வாக்குறுதி வழங்கியுள்ளது**

அலகுகளை நுகரும் பொழுது 50% கூடுதலாகவும் 300 அலகுகளை நுகரும் பொழுது 97% கூடுதலாகவும் கட்டணம் செலுத்துகின்றனர்.

இலங்கையின் மின்சார கட்டணம் அதிகரித்ததற்கான காரணம் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்ட வாக்குறுதியாகும். அதாவது இலங்கை மின்சார சபை மக்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம் மற்றும் திறைசேரியிலிருந்து பெறும் மானியம் மூலமும் தனது உற்பத்தி செலவினை சமப்படுத்துமென வாக்குறுதி வழங்கியுள்ளது.

பெப்ரவரி 2024இல் வரி குறைக்கப்படும் திட்டத்தின்படி, மின்சார கட்டணம் 4%இனால் குறைக்கப்பட்டுள்ளது. இது மிகச் சிறியளவு என்பதனால் மாற்றம் எதுவும் பெரிதாகத் தெரியமாட்டாது. அதனால் தொடர்ந்தும் தெற்காசியாவின் உயர்ந்த மின்சார கட்டணத்தினை இலங்கை மக்களே செலுத்தப்போகின்றனர்.

# "சில குறைகளுக்காக தீயிலிட முடியாது"

இந்த நிலையில், நிகழ்நிலை காப்புச் சட்டம் உயர்நீதிமன்றத்தின் திருத்த யோசனைகளுக்கு அப்பாற்பட்டு இயற்றப்பட்டுள்ளது, ஆகவே அது தொடர்பில் கலந்துரையாட விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை உடனடியாக கூட்டுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிரணி எம்.பிக்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

சட்ட வரைபு ஒன்று தயாரிக்கப்படும்போது அதன் அரசியலமைப்பின் விபாகத்தைச் சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியதன் பின்னர் தான் சட்ட வரைபு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் முதல் வாசிப்புக்குச் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்தை 14 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 45 இற்கும் அதிகமான அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அரசாங்கம் சார்பில் சட்டமா அதிபர் பல திருத்தங்களை முன்வைத்தார்.அதற்கமைய சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் பல வியாக்கியானங்களை முன்வைத்தது.

உயர்நீதிமன்றத்தின் திருத்தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு,குழு நிலை வேளையின் போது திருத்தம் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஒரு சட்டம் தொடர்பில் கேள்வி கேட்கும் உரிமை உயர்நீதிமன்றத்துக்கு கிடையாது.தயாரிக்கப்படும் சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு முரணா? அல்லது முரணற்றதா என்பதைப் பரிசீலனை செய்யும் அதிகாரம் மாத்திரமே உள்ளது.

அரசியலமைப்புக்கு முரணான ஒரு சரத்து காணப்படுமானால் அதனை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்று நீதிமன்றம் அறிவிக்கும். நிகழ்நிலை காப்புச் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இதில் ஒரு சில குறைபாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

இதற்கான முழு சட்டத்தையும் தீயிலிட முடியாது. திருத்த யோசனைகளை முன்வையுங்கள் பேச்சுவார்த்தையின் ஊடாக தீர்வு காணலாம். எந்த சட்டத்தையும் குறைபாடுகள் இல்லாமல் யாராலும் தயாரிக்க முடியாது என்றார்.

# விமல் அணியின் எம்.பியாக ஜகத் பியங்கர பதவிப்பிரமாணம்

பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பத்திரத்தில் அவர் கைச்சாத்திட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த புத்தளம் மாவட்ட எம்.பி.யான சனத் நிஷாந்த கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தார்.

அதனால், ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கே வாக்குகளின் அடிப்படையில் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஜகத் பியங்கர எம் .பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.



# யானை - மனித மோதலை தடுக்ககோரி மனுத் தாக்கல்

பாருக் ஷிஹான்

யானை - மனித மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதிக்கான மய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

யானை - மனித மோதலை தடுக்க நீதிக்கான மய்யம் மேற்கொண்ட சட்ட நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே மாநாடு நீதிக்கான மய்யத்தின் சாய்ந்தமருது காரியாலயத்தில் வைத்து புதன்கிழமை (07) மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசமானது யானைகள் வாழ்கின்ற பிராந்தியம் அல்ல. குறிப்பிட்ட காலங்களில் அம்பாறை மாவட்டத்தினுள் வருகின்ற யானைகள் அம்பாறை மாவட்ட யானைகள் இல்லை. வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு யானைகள் இங்கு விடப்படுவதான குற்றச்சாட்டு ஆராயப்பட வேண்டியுள்ளது.

தற்போது இவ்விடயம் பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதுடன், அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் யானை-மனித மோதலுக்கான தீர்வு பெற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் யானை-மனித மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனு தாக்கலை எமது அமைப்பு மேற்கொண்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்று கடந்த திங்கட்கிழமை (05) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 5 வருடங்களில் யானைகளின் தாக்குதலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் கிழக்கு மாகாணம் இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் உயிரிழப்பு அதிகமாக காணப்படுவதாகவும் இதற்கு தீர்வு வழங்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு எதிராக எமது அமைப்பு குறித்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்துள்ளது" என தெரிவித்துள்ளார்.



# மோசடி செய்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் விவசாயிகளிடமிருந்து சட்டவிரோத கள்ள தராசு மூலம் நெல் கொள்வனவில் ஈடுபட்ட 8 வியாபாரிகள் மீது புதன்கிழமை (07) வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட அளவீட்டுத் திணைக்கள பணிப்பாளர் வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, அரச அனுமதியற்ற 5 தராசுகள் மற்றும் அளவையில் மோசடி செய்யப்பட்ட 3 தராசுகள் உள்ளிட்ட 8 தராசுகளை கைப்பற்றியதுடன் அதனைத் திணைக்களத்திற்குக் கொண்டுசென்றுள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார்.


நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளின் தராசுகளை பரிசோதனை செய்யுமாறு அரசாங்க அதிபர் முரளிதரனினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமையவே இவ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், கைப்பற்றி கொண்டுவரப்பட்ட தராசுகளை அரசாங்க அதிபர் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளதுடன், தொடர்ந்தும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

ஏழு குடியிருப்பாளர்களுக்கு

# 20,000 ரூபாய் தண்டப்பணம்

எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம்-கொக்குவில் பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்த ஏழு குடியிருப்பாளர்களுக்கு தலா 20, 000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்து, டெங்கு ஒழிப்பு பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், கொக்குவில் பகுதியில் பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது, டெங்கு நுளம்பு பெருகும் சூழலுடன் சுற்றாடலை வைத்திருந்த 07 பேருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு புதன்கிழமை (07) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஏழு பேரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று, அவர்களுக்கு தலா 20,000 ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

## 19 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது

எம்.றொசாந்த்



யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 19 தமிழக கடற்றொழிலாளர்கள் புதன்கிழமை (07) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களை நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் மீது தாக்குதல்

எம்.றொசாந்த்




வீதி மின் விளக்குகளை களவாட முயன்ற கும்பலை தடுக்க முற்பட்ட, சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி, மந்துவில் பகுதியில் கும்பல் ஒன்று வீதியில் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த வீதி மின் குமிழ்களை களவாட முயன்றதை அவதானித்த மக்கள், இது தொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கு.குகானந்தனுக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அவ்விடத்திற்கு வந்த முன்னாள் உறுப்பினர், மின் விளக்குகளை திருட முயன்ற நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, அவர்கள் உறுப்பினர் மீது கடுமையாக தாக்கி அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான முன்னாள் உறுப்பினர் வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





## கடைத்தொகுதிகளை அமைக்க ஆளுநர் உறுதி


சிவா ஸ்ரீதரராவ்

கடந்த 28ஆம் திகதி இரவு தீயினால் எரிந்து நாசமான மாவனல்லை பிரதான பேருந்து தரிப்பு நிலையத்தைச் சுற்றி உள்ள சுமார் 30 கடைத்தொகுதிகளின் நிலைமைகளை சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

மேற்படி தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தீ பரவலை மாவனல்லை பிரதேச சபைக்குச் சொந்தமான தீயணைப்பு வண்டி மற்றும் அதிகாரிகள் பொலிஸார் உட்பட பிரதேச மக்களும் இணைந்து நிலைமையை சில மணித்தியாலங்களில் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தனர்.

மேற்படி தீயினால் எரிந்து நாசமான அனைத்து கடைத்தொகுதிகள் மற்றும் பேருந்து தரிப்பு நிலையத்தையும் அமைத்துக் கொடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## பெண் வைத்தியர் துஷ்பிரயோகம்: ஆண் வைத்தியர் கைது



மாவனெல்லை- அரநாயக்க மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் 28 வயதுடைய பெண் வைத்தியரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் வியாழக்கிழமை (8) கைது செய்யப்பட்டதாக அரநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரநாயக்க மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் 45 வயதுடைய திருமணமான வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பெண் வைத்தியரின் தந்தை அளித்த முறைப்பாட்டின் பிரகாரம், ஆண் வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வைத்தியர் வேறு வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் பெற்று கடந்த 5ஆம் திகதி அரநாயக்க மாவட்ட வைத்தியசாலைக்கு பணிக்காக வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான வைத்தியர் மற்றும் அப்போது கடமையில் இருந்த 5 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், சம்பவத்திற்கு முகம் கொடுத்த பெண் வைத்தியர் கேகாலை போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்தியரிடம் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து

## கவனம் செலுத்த உள்ளோம்"

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பங்காளர் அமைப்பான AHRC நிறுவன பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் பிரமுகர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் திங்கட்கிழமை (05) இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாகவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கான தீர்வு தொடர்பாகவும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "எமது ஆட்சியில் இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் வேறுபாடு இன்றி சம உரிமையுடன் நடத்தப்படுவார்கள். இவ்வாறான நிலையிலும் தனியாகப் பிரிந்து செல்ல வேண்டும் என தமிழ் மக்கள் கோருவார்களாக இருந்தால் அதை நடைமுறைப் படுத்துவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை அது அவர்களுடைய



உரிமையாகும்" என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்னெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எங்களுடைய ஆட்சியில் மக்களிடையே எந்த ஏற்றத் தாழ்வுகளும் காணப்படாது அனைவரும் சமமாகவே நடத்தப்படுவார்கள். அனைவருக்கும் அனைத்தும் சமமாகவே பகிரப்படும் இவ்வாறான நிலையிலும் தமிழ் மக்கள் தனியாகப் பிரிந்து வாழ நினைப்பார்களாக இருந்தால் அதை நடைமுறைப் படுத்துவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்ட படுகொலை செய்யப்பட்ட இந்த பிரச்சினை தமிழ் மக்களுக்கு மாத்திரமான பிரச்சினை இல்லை. இந்தப்பிரச்சினை எங்களுக்கும் இருக்கின்றது. 2021 மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் உட்பட ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் உள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இன்னும் இறப்புச் சான்றிதழ்கூட கிடைக்கவில்லை. இது ஒரு பாரிய பிரச்சினை, யுத்தம் முடிந்த கையோடு, ஆட்சியில் இருந்த அரசாங்கத்திற்கு சொன்னோம்.

இதுபோன்ற காணாமல் போனவற்றை தேடிக் கொடுக்க வேண்டியதும் அதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியதும் எமது பொறுப்பாகும். எனவே, பாதிக்கப்பட்ட குழுக்களையும் கருத்தில் வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் அதற்கான திட்டங்களை வகுக்க உள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

# வாய் கிழிய பேசினாலும் சேஷ்டைகளுக்கு குறைவே இல்லை

தற்போதைய நிலையில், வீட்டிலுள்ள அனைவரும் மட்டுமன்றி, நாயும் வேலைக்குச் செல்லவேண்டுமெனக் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த காலத்தில் ஆண், பெண் என இருவரும் வருமான மீட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அதேபோல வேலைக்குச் செல்லும் பெண்களும் அதிகளவில் காணப்படுகின்றனர். பொருளாதாரக் கொள்கைகளால் ஆண்களைப் போலவே வருமான மீட்ட வேண்டிய தேவைக்குப் பெண்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

காலை வேளைகளிலும் மாலை வேளைகளிலும் பிரதான நகரங்களிலுள்ள வீதிகளில் ஓட்டமும் நடையுமாக விரைந்து செல்லும் மக்கள் திரளில் சரிக்குச் சரிபாதி பெண்கள் என்பதை அன்றாடம் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

நமது நாட்டில் மட்டமன்றி, பல்வேறான நாடுகளில் இவ்வாறான நிலைமையே காணப்படுகின்றது. மேலைத்தேய நாடுகளில் சிலவற்றில், கணவன்- மனைவியும் ஒரேநேரத்தில் கடமைக்குச் சென்று ஒரே நேரத்தில் வீட்டுக்குத் திரும்புவதில்லை. இன்னும் சிலர், மேலதிக வேலையைத் தேடிச்சென்று விடுகின்றனர். அந்தளவுக்குப் பொருளாதார நெருக்கடிக்கு ஒவ்வொருவரும் முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்துகின்றனர். அதில் பயணஞ்செய்யும் பெண்கள், பல்வேறான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில், பாலியல் ரீதியிலான சீண்டல்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இடமிருந்தாலும் இளம்பெண்களுக்கு அருகில் நின்று, அவர்களை வருடுதல், உரசிக்கொண்டு நின்றால், அங்கங்களைத் தொடுதல், உட்பட வாய்மொழிகளிலும் சைகளிலும் பாலியல் சேஷ்டைகளை விட்டுக்கொண்டுத்தான் செல்கின்றனர்.

ஒருசில பெண்கள், என்ன செய்வதெனத் தெரியாமல், சமாளித்துக்கொண்டு நகர்ந்து விடுகின்றனர். இன்னும் சிலர், கூச்சலிட்டு எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். பலரும் சட்ட ரீதியிலான நடவடிக்கையை எடுக்கத் தவறுவதில்லை. துணிந்து நிற்கும்போதே, குற்றஞ்சாட்டப்படும் நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியும்.

பொதுப் போக்குவரத்தில், பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களை மேற்கொள்ளும் நபர்களை இனங்கண்டு, நடவடிக்கை எடுக்கும் வகையில், சிவில் உடையணிந்த பொலிஸார் களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த செயற்பாடு இடைநடுவில் கைவிடப்பட்டுவிடக்கூடாது. முதல்நாளன்றே 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் குறித்து 109 என்ற பிரத்தியேக அவசர தொலைபேசி எண்ணைப் பயன்படுத்திப் புகாரளிக்க முடியும். அதுமட்டுமன்றி, தாங்கள் சீண்டலுக்கு உள்ளாக்கப்பட்டால், அவைதொடர்பில் அறிவிக்க, ஒவ்வொரு பேருந்துகளிலும் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன என்பதைப் பெண்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

2015இல் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) நடத்திய ஓர் ஆய்வில், பொதுப் பேருந்துகள் மற்றும் ரயில்களைப் பயன்படுத்தும் பெண்களில் சுமார் 90 சதவீதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளதாகவும் இப்பிரச்சினை இலங்கைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவை பொறுத்தவரையில், பெண்களுக்கென தனியான பேருந்துகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த நடைமுறை இங்கு சாத்தியமாகாது எனினும், பெண்களுக்கு மட்டும் பேருந்தின் ஒரு பக்கத்தை ஒதுக்கமுடியும். இதனை இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளில் ஆரம்பிப்பது சிறந்தது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களை பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர். இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராளமனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை. இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என எராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர். சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும்போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களை துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி-பருத்தியூர் பால- வைரவநாதன்

## கடிதங்கள்

### ஆபத்தான மரக்கிளைகளை அகற்றுங்கள்

நகரசபைகள் மற்றும் மாநகர சபைகளின் கட்டளைகளுக்கு அமைய, ஆபத்தான மரக்கிளைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் ஆபத்தான மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் மத்திய மாகாணத்தில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதுபோன்ற ஆபத்தான விடயங்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு அதிகாரம் இருப்பதாகவும், தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் அத்தகைய இடங்களை ஆய்வு செய்து, அது குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களுக்குத் தெரிவித்து, 14 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அவை அகற்றப்பட்டு பணம் வழங்கப்படும்.

அதற்காக செலவிடப்படும் தொகை பின்னர் வசூலிக்கப்படும். அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் கட்டளைச் சட்டங்களிலேயே உள்ளது.

இது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்கான முறைமையை தயார் செய்து உடனடியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வீதியோரங்களில் காணப்படும் மிக ஆபத்தான மரங்கள் , மரக்கிளைகள், ஆபத்தான கட்டிடங்கள் மற்றும் மின்சார தூண்கள் ஆகியன தொடர்பில் பொதுமக்கள் உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பி.கேதீஸ்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின்-39:

# சாதியத்துக்கெதிரான போராட்டங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இன்றும் ஈழத் தமிழ்ச் சமூகம் பேச அஞ்சுகிற அல்லது பேசாமல் தவிர்க்க விரும்புகின்ற ஒரே கருப்பொருள் சாதியம் பற்றியது. இன்று ஈழத் தமிழ்ச் சமூகத்தில் சாதியம் இல்லை என்று பேசுபவர்கள் இரண்டு பொய்களைத் தொடர்ந்து சொல்கிறார்கள். முதலாவது, தமிழ்த் தேசியம் சாதியத்தை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றியது. இரண்டாவது, விடுதலைப் போராட்டம் சாதியத்தை முற்றாகவே ஒழித்து விட்டது. இவை இரண்டும் அபத்தமான பொய்கள். இன்றும் தமிழ்ச் சமூகத்தில் சாதியம் நீக்கமற நிறைந்திருக்கிறது. தமிழ்த் தேசியம் சாதியத்தைத் தக்கவைக்கப் பயன்பட்டதேயன்றி ஒழிக்கவல்ல. ஆனால், தமிழ்ச் சமூகத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றைக்கு ஆறு தசாப்த காலத்திற்கு முன்னர் சாதியத் தீண்டாமை நிலைபெற்ற கேவலங்கெட்ட ஒரு சமூகமே ஈழத் தமிழ்ச் சமூகம். தீண்டாமை எவ்வாறு ஒழிக்கப்பட்டது என்ற வினாவையும் அதற்கெதிரான வீரஞ்செறிந்த போராட்டத்தையும் இணைத்துப் பார்ப்பது முக்கியமானது.

இலங்கைச் சமூக அமைப்பின் அசைவியக்கத்தில் சாதியம் ஒரு கூறாக நிலைத்து நீடித்து வந்துள்ளது. குறிப்பாக இலங்கைத் தமிழர்களிடையே சாதியமும் அதன் உடன்பிறப்பான தீண்டாமையும் தீவிரமான சாதிய முரண்பாடாகவும் ஒடுக்குமுறையாகவும் இருந்து வந்துள்ளன. அவற்றுக்கு எதிரான பன்முக எதிர்ப்புகளும் போராட்டங்களும் அவ்வப்போது இடம்பெற்று வந்துள்ளன. கடந்த நூற்றாண்டின் முற்கூற்றிலிருந்து வடபுலத்திலே சாதியத்திற்கு எதிரான உணர்வுகள் வெளி வெளியான குரல்களாகி வளர ஆரம்பித்தன. ஐம்பதுகள் வரை அவற்றின் வளர்ச்சிகள் கோரிக்கைகளாக, மனுக்களாக, இரந்துரைகளாகவே இருந்து வந்தன. ஆனால், ஐம்பதுகளுக்குப் பின் ஓரளவிற்கு அழுத்தக் குரல்களாகி, எல்லைகளுக்கு உட்பட்ட சாத்வீகப் போராட்ட வடிவங்களையும் பெற்றது. அவையும் பாராளுமன்ற எதிர்பார்ப்புக்களாகவும் சீர்திருத்தக் கோரிக்கைகளாகவும் இருந்து வந்தன. சைவ கிறிஸ்தவ வேளாள ஆதிக்க சக்திகளிடமும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளிடமும் மன்றாடிக் கேட்கும் நிலையே காணப்பட்டது. அப் பாராளுமன்றத் தலைமைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரங்கிப்போட வேண்டிய பிச்சை போன்று எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பி அற்ப சொற்ப சலுகைகளுக்காகக் காத்து நிற்கும் நிலையே நீடித்து வந்தது. சாதி அடிப்படையிலான அமைப்புகளும் குறிப்பிட்ட எல்லைகளுக்கு அப்பால் போராட்டப் பாதையில் செல்ல முடியாத நிலைக்குள்ளேயே சுழன்று வந்தன. சாத்வீகமான சமாதான வழிகளுக்கு அப்பால் எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை.

பாராளுமன்றப் பதவி அன்றைய செனட்டர் பதவி போன்ற சில பதவிகள் பட்டங்கள் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் உள்ள ஓரிரு படித்தவர்களுக்குக் கிடைத்தால் உரிமைகளை வென்றெடுத்து விடலாம் என்ற போலியான எதிர்பார்ப்புகள் இருந்து வந்தன. இதனால் 1960களின் நடுக்கூறு வரை தாழ்த்தப்பட்ட மக்களது சாதிய அடிமைத்தன வாழ்வில் பெரும் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. சில சீர்திருத்தச் செயற்பாடுகள் இடம்பெற்ற அதேவேளை, சாதிய முரண்பாடானது உள்ளார்ந்த வளர்ச்சி பெற்று வந்தது. அவ்வப்போது அதன் வெளிப்பாடுகள் வெவ்வேறு முனைகளில் அடையாளங் காட்டி நின்றன.

தமிழ்த் தேசியவாதிகள் பழைமை வாதத்தையும் சாதியத்தையும் தூக்கி நிறுத்திப் புகழ் பாடுபவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள். அவர்கள் சாதியத்துக்கு எதிரான கருத்துக்களை நிராகரிப்பதுடன், தமிழ்த் தேசிய வரலாறு அவ்வாறே எழுதப்பட்டுள்ளது. உதாரணமாகப் பொன்னம்பலம் இராமநாதனைப் போற்றிப் புகழுவோர் அவரது தம்பியான அருணாசலத்தைக் கவனிப்பதில்லை. காரணம் தனது சூழலையும் மீறிய வகையிலான சமூகச் சார்புக் கருத்துக்களை அருணாசலம் முன்வைத்தார். அவ்வாறே எஸ்.ஜே.வி.செல்வநாயகம் சாதியத்தை ஒழிக்கப் பாடுபட்டார் என்று கூறும் தமிழ்த் தேசிய வாதிகள் அவரது காலத்தில் கண்ணெதிரே இடம் பெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றி வாயே திறப்பதில்லை.

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உருவாகிய தமிழ்த் தேசியத்தைச் சைவ-வேளாள மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகள் தமது பாராளுமன்றப் பதவிகளுக்கான பாதையில் முன்னெடுத்தன. அதேவேளை, சாதிய முரண்பாடும் ஒடுக்குமுறையும் உள்ளூர கனன்று கொண்டிருந்தது.

இத்தகைய சாதிய சமூக முரண்பாட்டு அம்சத்தின் யதார்த்த நிலைமையை உரியவாறு அடையாளம் கண்டே புரட்சிகர பொதுவுடைமைக் கட்சி சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானித்தது. 1966ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதி அன்று சாதிய-தீண்டாமையை எதிர்த்து சுன்னாகத்திலிருந்து ஒரு ஊர்வலத்தை ஆரம்பித்து யாழ். முற்றவெளியில் பொதுக் கூட்டத்தை நடாத்தவும் முடிவு செய்தது. ஆனால், பொலிஸ் ஊர்வலத்திற்குத் தடை விதித்திருந்தது. அதற்குச் சாதிய ஆதிக்கம் கொண்டவர்களதும் பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகளினதும் தூண்டுதல் இருந்தது. ஆனால், பொலிஸ் தடையையும் மீறி 'சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற கோசத்தோடு சாதிய- தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர முழக்கங்களை எழுப்பியவாறு ஊர்வலம் சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து புறப்பட்டு பிரதான வீதியில் அமைந்திருந்த பொலீஸ் நிலையத்தைக் கடந்து செல்ல அணிவகுத்துச் சென்றது.

ஊர்வலத்தின் மீது பொலிஸார் மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டது. ஊர்வலத்தில் திரண்டவர்கள் பொலிஸாரின் தாக்குதலுக்குப் பின்பும் கலைந்து செல்லவில்லை. பொலிஸாருடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்ட அவர்கள் யாழ் நகரின் கூட்டத்திற்கு ஊர்வலமாகச் செல்வதையே வற்புறுத்தி நின்றனர். மீண்டும் மோதல் வெடிப்பதைத் தவிர்க்க, முழங்கங்கள் இன்றி யாழ். நகருக்கு நடந்து செல்வதற்கு பொலிஸ் அதிகாரிகள் அனுமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அவ்வாறு எட்டு மைல்கள் நடந்து சென்ற ஊர்வலத்தினர் யாழ். நகரில் மிகப் பெரும் கூட்டத்தை நடாத்தினர். அன்றைய எழுச்சியைத் தொடர்ந்து சாதிய தீண்டாமைக்கு எதிரான வடபுலம் தழுவிய கூட்டங்கள், ஊர்வலங்கள், கருத்தரங்குகள் எனப் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டன. அவற்றைச் சாதி ஆதிக்க சக்திகள் பொலிஸ் துணை கொண்டு அடக்க முற்பட்டன. அத்தகைய அடக்குமுறைகள் மேன்மேலும் அவ் இயக்கம் மக்களிடையே பரவக் காரணமாகியது.

சங்கானையில் உள்ள தேநீர்க் கடைகளில் சமத்துவம் போரி போராட்டம் ஆரம்பித்தது. அமைதியாகவும் சமாதானமாகவும் சமத்துவத்துடன் தேநீர் தரும்படி கேட்டபோது, மறுப்பும் பலாத்காரமும் பதிலாகக் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து சங்கானையின் நிச்சாமம் கிராமம் சாதி வெறியர்களால் தாக்கப்பட்டது. அவர்களது துப்பாக்கிக்கு சின்னர் கார்த்திகேசு என்பவர் இலக்காகி உயிர் நீத்தார். வீடுகள் எரியூட்டப்பட்டன. பலர் காயங்களுக்கு உள்ளாகினர். ஆனால், மக்கள் அடி பணிந்து விடவில்லை. பதிலுக்குப் போராடும் திடசங்கற்பத்துடன் எதிர்த்து எழுந்தனர். சங்கானைப் போராட்டத்தின் உக்கிரத்தையும் மக்கள் காட்டிய புரட்சிகர உறுதிப்பாட்டையும் தொடர்ந்து, வடபுலம் எங்கும் சாதிய தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் முன் செல்ல ஆரம்பித்தன.

சங்கானைப் போராட்டத்தைத் தொடர்ந்து சாவகச்சேரி, கொடிகாமம், அச்சுவேலி, கரவெட்டி- கன்பொல்லை போன்ற பகுதிகளில் தேநீர்கடைப் போராட்டங்கள் வெடித்தன. அப்போராட்டங்கள் சாதி ஆதிக்கவாதிகளையும் சாதி வெறியர்களையும் அவர்களுக்குப் பக்கபலமாக நின்ற ஆளும் வர்க்க அரசு யந்திரமான பொலிஸையும் எதிர்த்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுத்தனர். அதேவேளை, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் போன்ற பெரும் கோவில்களிலும் ஏனைய கோவில்களிலும் ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் இடம்பெற்றன. சுமார் ஐந்து (1966-71) வருடங்கள் நீடித்த வெகுஜனப் போராட்டங்கள் சாதிய தீண்டாமையை உடைத்தெறிந்தது தேநீர்க் கடைகள், ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் சமத்துவமும் ஜனநாயகமும் நிலை நாட்டப்பட்டது. அன்றைய புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களில் 15 பேர் தமது இன்னுயிர்களை இழந்து தியாகிகள் ஆகினர்.

1966 ஒக்ரோபர் 21 எழுச்சி இலங்கைத் தமிழர்களின் சாதிய வரலாற்றில் மிகப் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்திய ஒரு புரட்சிகர எழுச்சியாகும். சாதியத்தையும்-தீண்டாமையையும் எதிர்த்து எழுந்த அவ் எழுச்சியும் அதன் பாதையில் முன்னெடுக்கப்பட்ட வெகுஜனப் போராட்டங்களும் ஆண்டாண்டு காலமாகத் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிணைத்திருந்த அடிமை விலங்குகளை உடைத்தெறிந்தது. ஜனநாயக மனித உரிமைகளை வென்றெடுத்து சமத்துவத்தையும் சமூக அந்தஸ்தையும் நிலை நாட்டியது.

இங்கு 2 விடயங்கள் முக்கியமானவை. 1ஆவது, தமிழர்களிடையே கொடூர ஒடுக்கு முறையாக நீடித்த சாதியத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற வரலாறு முழுத் தமிழர்களின் விடுதலைக்குப் படிப்பினை தரும் போராட்டமாகும். 2ஆவது, தமிழ்த் தேசியவாதத்தின் பாராளுமன்றத் தலைமைகள் இவ் வெகுஜனப் போராட்டங்களை துளியளவும் ஆதரிக்கவில்லை.

### கொமர்ஷல் வங்கி கிரெடிட் கார்ட்
# உரிமையாளர்களுக்கு வசதி



கொமர்ஷல் வங்கியினால் வழங்கப்பட்ட பிரீமியம் பிரிவு கிரெடிட் கார்ட்களை வைத்திருப்பவர்களுக்கு விமான நிலைய ஓய்வறை அணுகலை மேம்படுத்துவதாக வங்கி அறிவித்துள்ளது.


வங்கியால் செயற்படுத்தப்படும் இந்த முயற்சியானது, கொமர்ஷல் வங்கி வீசா Infinite கிரெடிட் கார்ட்களை வைத்திருப்பவர்கள் உலகெங்கிலும் உள்ள விமான நிலைய ஓய்வறைகளில் வருடத்திற்கு நான்கு விசேட சலுகையினை அனுபவிக்கலாம். அத்தோடு Visa Signature மற்றும் World Mastercard கிரெடிட் கார்டுகளை வைத்திருப்பவர்கள் இரண்டு விசேட ஓய்வறை சலுகையினை பெறுவதற்கும் தகுதி பெறுவார்கள் எனவும் வங்கி அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் சில்லறை வங்கி மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க, 'பிரீமியம் கிரெடிட் கார்ட்களை வைத்திருப்பவர்களுக்கு விமான நிலைய ஓய்வறை அணுகல் வழங்கப்படுவது வழக்கம். 'கொமர்ஷல் வங்கியால் வழங்கப்பட்ட மூன்று வகை பிரீமியம் கார்ட்களுக்கு பிரத்தியேகமாக வழங்கப்படும் இந்த அணுகல் அதிகரிப்புடன், எங்களது கார்ட்களை வைத்திருப்பவர்களுக்கு கிடைக்கும் கூடுதல் மதிப்பை நாங்கள் வெளிப்படுத்துகிறோம்' என்றார்.

விரிவாக்கப்பட்ட ஓய்வறை நன்மைகள் வாடிக்கையாளர் அனுபவத்தை அதிகரித்துள்ளதுடன், விசா மற்றும் மாஸ்டர் கார்ட் பிரீமியம் கார்ட்டுகளின் எல்லை தாண்டிய பயன்பாட்டை அதிகரிக்க, வங்கியின் பிரீமியம் அட்டைதாரர் பிரிவில் ஒட்டுமொத்த கிரெடிட் கார்ட் செலவினங்களை அதிகரிக்கவும், நம்பிக்கை மற்றும் வாடிக்கையாளர் தக்கவைப்பை மேம்படுத்துதல் மற்றும் ComBank பிரீமியம் கார்டை மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், போட்டித்தன்மையுடையதாகவும் மாற்றவும் இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், கொமர்ஷல் வங்கியால் வழங்கப்பட்ட UnionPay AP (Asia Prestige) டயமண்ட் கார்ட்களை வைத்திருப்பவர்கள் விமான நிலைய ஓய்வறையை அனுபவிக்கின்றனர். DragonPass இலிருந்து கூடுதல் ஓய்வறை அணுகலுடன் கார்ட் உரிமையாளர்களுக்கு எல்லையற்ற VIP விமான நிலைய ஓய்வறை அணுகல் மற்றும் அவர்களது துணைக்கு வருடத்திற்கு ஆறு இலவச வருகைகளும் யூனியன்பே ஏபி பிளாட்டினம் கார்ட் வைத்திருக்கும் கார்ட்தாரர்கள் மற்றும் அவர்களது நண்பர்கள் என இருதரப்புக்கும் வருடத்திற்கு ஆறு முறை இலவச VIP விமான நிலைய ஓய்வறை அணுகலும் வழங்கப்படுகிறது.

# SLT-MOBITEL, Duthaya உடன் கைகோர்ப்பு



பிரத்தியேக உதவி app ஆன Duthaya, தனிநபர்களுக்கு தமது தினசரி செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுப்பதை உறுதி செய்யும் வகையில், பல்வேறு சௌகரியமான சேவைகளை வழங்குகின்றது.

அத்தியாவசிய ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் அல்லது விநியோகங்களை நிர்வகித்தல் போன்ற தினசரி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உடனடி உதவித் தேவையை கொண்டிருப்பவர்களுக்கும், உள்நாட்டில் சேவைகளிடையே காணப்படும் இடைவெளியை நிவர்த்திக்க Duthaya எதிர்பார்த்துள்ளது. ஒன்லைன் மற்றும் மொபைல் சந்தைப்பகுதிகள் போன்ற உள்நாட்டு சேவைகளுடன் பாவனையாளர்களை இணைப்பதாக Duthaya அமைந்துள்ளது. அதனூடாக இன்றைய வேகமாக நகரும் உலகில் நேரத்தை சேமிக்கும் சௌகரியத்துக்கான தீர்வை வழங்குகின்றது.

வங்கியியல், அரச ஆவணச் சேவைகள், வியாபாரத் தேவைகள், விநியோகங்கள், விற்பனையக கொள்வனவுகள் போன்ற சேவைகளை மேற்கொள்வதற்கான உதவிகளை தூதுவர்கள் அல்லது பிரத்தியேக உதவியாளர்களுடன் பாவனையாளர்களை இணைக்கும் நடவடிக்கைகளை Duthaya's app மேற்கொள்கின்றது. வாடிக்கையாளர்கள் தமது app இல் கோரிக்கையை பதிவு செய்ததும், பயிற்சி பெற்ற தூதுவர் ஒருவர் பணிக்காக ஒதுக்கப்படுவார். அதனூடாக குறித்த பணிகள் முன்னெடுக்கப்படும். Duthaya இன் பிரதான வலிமை என்பது அதன் சகாயத்தன்மை, ஏனைய விநியோக சேவைகளில் கிடைக்காத ஆவணப்படுத்தல் சேவைகளுக்கான வசதியளிப்பு மற்றும் ஒட்டு மொத்த சௌகரியம் ஆகியன உறுதி செய்யப்படுகின்றன.

புத்தாக்கமான app இனூடாக வேலைப்பளு நிறைந்த தனிநபர்களின் நேரம் மீதப்படுத்தப்படுவதுடன், வயது முதிர்ந்தவர்களுக்கு உதவிகளை வழங்குவது மற்றும் வெளிநாடுகளில் வசிப்போருக்கு இலங்கையில் பணிகளை முன்னெடுப்பது போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. கவர்ச்சிகரமான விலைகளில் சேவைகள் கிடைப்பதுடன், Duthaya இனால் சகாயமான சௌகரியமான கவனம் செலுத்துகையினூடாக வலுவூட்டல் மேற்கொள்ளப்படும்.


வாடிக்கையாளர்கள் தமது மொபைல் சாதனங்களில் Duthaya app ஐ டவுன்லோட் செய்து, கிடைக்கும் பல்வேறு சேவைகளிலிருந்து பயனை அனுபவிக்க ஆரம்பிக்க முடியும். SLT-MOBITEL வழங்கும் மற்றுமொரு டிஜிட்டல் முன்னெடுப்பாக இது அமைந்துள்ளது. Duthaya உடன் பணியாற்றுவதனூடாக, புத்தாக்கமான டிஜிட்டல் சேவைகளை மக்களின் விரல் நுனிகளுக்கு கொண்டு வந்து வாழ்க்கையை எளிமைப்படுத்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் அர்ப்பணிப்பை SLT-MOBITEL மீள உறுதி செய்துள்ளது. டிஜிட்டல் சேவை வழங்குநர்கள் எனும் வகையில், SLT-MOBITEL மற்றும் Duthaya சேவைகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியன இலங்கையில் டிஜிட்டல் வலுவூட்டலை செயற்படுத்துவதில் அதிகளவு கவனம் செலுத்த தம்மை அர்ப்பணித்துள்ளன.

இந்தப் பங்காண்மை தொடர்பில் SLT-MOBITEL பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "Duthaya app இனால் அணுகல் திறனில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சேவையினூடாக அரசாங்க, வங்கியியல், வியாபார ஆதரவு, மிருதுவான விநியோகம், விற்பனை நிலைய உதவி மற்றும் வினைத்திறனான வரிசை முகாமைத்துவம் போன்ற பணிகளை எளிமைப்படுத்தி, வேலைப்பளு நிறைந்த நபர்களுக்கு, முதியவர்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ளவர்களுக்கு உதவிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. எமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தல், சௌகரியத்துக்கு முன்னுரிமையளித்தல், பிரத்தியேகமயப்படுத்தல் போன்ற எமது சொந்த கொள்கைகளுக்கமைய இது அமைந்துள்ளது." என்றார்.

Duthaya டிஜிட்டல் சேவைகள் பணிப்பாளர் தரீந்திர டி கல்பகே கருத்துத் தெரிவிக்கையில், "பிரத்தியேக உதவிச் சேவைகளில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் SLT-MOBITEL உடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அதனூடாக நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு பெருமளவு சௌகரியத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. வேகமாக நகரும் உலகில் சகாயமான, மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய உதவிச் சேவையாக Duthaya ஆரம்பிக்கப்பட்டது.

Duthaya app ஊடாக "தூதுவர்களுடன்" இணைத்து, மக்கள் மற்றும் சேவைகளிடையே காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்கிறோம். இதில் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள், விநியோகங்கள், வங்கிச் சேவைகள் போன்றன அடங்கியுள்ளன. SLT-MOBITEL இன் நாடளாவிய ரீதியான சென்றடைவினூடாக, தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வாழ்க்கையை எளிமைப்படுத்தல் எனும் எமது பகிரப்பட்ட இலக்கை மீள உறுதி செய்துள்ளோம். இந்த கைகோர்ப்பினூடாக எமது app இனால் மேலும் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்திருக்கும் என நம்புகின்றோம்" என்றார்.

# படியேறாப் பாதணிகள்....!





பேசுவதொன்று
செய்வது ஒன்று
எனில்..,
தயவுசெய்து நீ
பேசாமல்
இருந்துவிடு ...!

நட்பு என்று
கைகோர்த்து
உனது உள்நோக்கம்
வஞ்சிப்பதுவே என்ற எண்ணமிருப்பின்
இன்றே நீ விட்டு விலகிவிடு...!

உதவுவதுபோல உன்கரங்கள் நீள
மறுபுறம் உனது கால்கள்
உதைப்பதற்கல்லவா
தயாராகின்றன...!

உன் உதட்டுப் புன்னகைக்கும்
அதனுடன் முரண்படும் இதயத்தின்
வருத்தம் தரும் உனது
மோசமான நகர்வுகளும்
என்னை நித்தம் நித்தம் வதைத்தபடி...!

மெத்தப் படித்தவனாம் நீ
பறைசாற்றுகின்றன
உனது பெயருக்கு முன்னாலும்
பின்னாலும் பல பட்டங்கள்
படிப்பின் உச்சத்தின் பரிமாணங்களாக
ஆனாலும்...
உனது பண்பாடுகளோ நடத்தைகளோ
வாசலில் கழட்டிவைத்த பாதணிகளாக
படியேறா நிலையில்...!

நிறைய நிறைய எழுதுகிறாய்
ஏன் நீ
நிறைய நிறையவே வாசிக்கின்றாய்
என பிரலாபிக்கும் உன்னிடம்
பூரண மனிதனைக் காணமுடியவில்லை
ஆணவத் தொனிகள்தான் எவ்வேளையும்
உன்னை அடையாளப்படுத்துகின்றன...!

- ஷெல்லிதாசன்

# நம் தேசம்



சிலைகளை முன்னிறுத்தி
சிலைகளுடன் பேசிப் பேசி
சில காலம் ஆட்சி செய்த
சிற்பிவழி வந்த மன்னன்
சிந்தித்தான் சிந்தித்தான்...

மலைகள் முடிந்து விட்டது
மாயை துலங்கி விட்டது
மனிதன் விழித்துக் கொண்டதும்
மதங்கள் தூங்கி விட்டது
சிந்தித்தான் சிந்தித்தான...

சிரிப்பதற்கு வழியும் இல்லை
சிந்திப்பதற்கு மொழியும் இல்லை
பந்திக்கு உணவும் இல்லை
அந்திக்கு ஒளியும் இல்லை
சிந்தித்தான் சிந்தித்தான்...

வா என்றால் வர வேண்டும்
போ என்றால் போக வேண்டும்
வாய்க்கு பூட்டு இட்டால்
மழை நின்று போக வேண்டும்
சிந்தித்தான் சிந்தித்தான்...



உண்மைகளை புதைப்பதற்கு
யாலம் ஒன்று தேவை
ஊமைகளைப் படைப்பதற்கு
யாகம் ஒன்று தேவை
சிந்தித்தான் சிந்தித்தான்...

மக்களை சிலை வடித்தால்
மௌனம் அது எஞ்சும்
மாயஜால வித்தையிலே
தன் மணிமகுடம் மிஞ்சும்
சிந்தித்தான் சிந்தித்தான...

சட்டம் என்னும் உளியை
கையில் எடுத்து
சத்தம் என்னும் பகை வாயை
அடைத்தால்
மத்தம் அது மண் சூழும்
சித்தம் அது நிறைவேறும்
சிந்தித்தான் சிந்தித்தான்...

நிகழ்நிலையில் நின்று
நீண்ட தூரம் பார்த்தான்
ஆண்டான் அடிமை முறை
அரங்கேற்ற நாள் குறித்தான்
அந்த நாள் நெருங்கியது
நெஞ்சமெல்லாம் நெருங்கியது...

- இரவிகாந்தன்




# வெறுமை

அவனுக்கும்
'ஈ' க்குமான
போட்டியில்...

கோப்பையின்
உள்ளே கிடந்தது - ஈ
வெளியே - இவன்

மீந்துபோன
தேநீரைப் போல்
ஆறிப்போயிருந்தது
சிலரின் மனது.

- திருமலை சிட்டு



# நீ அறிந்த சுதந்திரம்



மனிதம் வாழ தலைபடும்
உலகில் பட்டாம்பூச்சிக்கு
பறப்பது உரிமை - அதே
மயிர்கொட்டி க்கு
உதிர்ந்து உலர்வது
உரிமை...

உயர பறக்கும் கழுகிற்கு
கணபொழுதில்
களக்கரை மீனை
கவ்வி இரையாக்க
கடமை...

இதில் கணங் கணக்கும்
போதி (உ)ப்பை
கழுதை சுமப்பது
தான் வீண் தொல்லை...

யாரின் சுதந்திரம்
யார் கையில் கணம் பார்க்க
கச்சேரி களமா?
ஆள்மாறாட்டம்...

ஏணி படியா நழுவிற்று,
தூரம் எட்டப்படாத
பாதாளத்தில்
பனிபோராக...
ஓர் தாய் பிள்ளைகள்
என்பதற்காக மட்டும்
ஓட்டு வங்கியில்,

ஒடி ஒளிந்து ஆசனமேறி
அலங்கார கூத்து விளக்காக
இருப்பிட வகிக்கவா...?

நம் வாய்க்கட்டி
தேச மக்கள் எனும் போர்வையில்
காவல் காக்கின்றோம்...
சுதந்திரத்தின் வேட்கையை....

அணிதிரளும் ஒவ்வொரு மாற்றமும்
ஆட்சி திசையை மாற்றிவிடும்
என்ற பயம் மக்களை
பிரித்தாழும் தந்திரத்தில்
பகுத்துண்டு பரிகாரம்
தேடி அழைகிறது
இந்த சுதந்திரம்...!

இதுவல்லவா உண்மை
உண்பதற்கு உடுப்பதற்கும்
உள்ளம் படி நிம்மதியில்
ஊழியம் பார்த்து உறங்குவதற்கும்
உபத்திரம் விளாத நியாயமே சுதந்திரம்...

நாள்கூலி தினம்பெற்று ஜீவியம்
தேடும் ஓர் தலைமகன்
மனதார சொல்லட்டும் எனது தேசம்
சுதந்திரம் அடைந்தாக
தணிக்கை இடைவெளியை நிரப்ப.

- வியாத்தன்

புது டெல்லி

# “காங்கிரஸுக்காக வேண்டினார் மோடி”



“வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 40 இடங்களையாவது தக்கவைத்து கொள்ள நான் பிரார்த்தனை செய்கிறேன்” என காங்கிரஸ் தலைவர் கார்கேவுக்கு பதிலடி தரும் வகையில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பாராளுமன்ற மாநிலங்களவையில் பதில் அளித்து பிரதமர் மோடி, “காங்கிரஸ் குறித்த மம்தா பானர்ஜியின் 40 சீட் அறிக்கையை மேற்கோள் காட்டி, “நீங்கள் 2024 மக்களவைத் தேர்தலில் 40 இடங்களை பெறுவதற்கு நான் இறைவனை வேண்டுகிறேன்” என கார்கேவை கேலி செய்யும் வகையில் தெரிவித்துள்ளார்.



ஆப்கானிஸ்தானுக்கெதிரான தொடரிலிருந்து

# முன்னாள் அணித்தலைவர் ஷானக நீக்கம்

ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமிலிருந்து முன்னாள் அணித்தலைவர் தசுன் ஷானக நீக்கப்பட்டுள்ளார்.

சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த துடுப்பாட்டவீரர் நுவனிடு பெர்ணாண்டோ, சுழற்பந்துவீச்சாளர் ஜெஃப்ரி வன்டர்சே ஆகியோரும் இடம்பெறாத நிலையில் இவர்களை சாமிக கருணாரத்ன, துடுப்பாட்டவீரர் ஷெவோன் டானியல் ஆகியோர் பிரதியிட்டுள்ளனர்.

குழாம்: குசல் மெண்டிஸ் (அணித்தலைவர்), சரித் அசலங்க, பதும் நிஸங்க, அவிஷ்க பெர்ணாண்டோ, சதீர சமரவிக்கிரம, சஹான் ஆராச்சிகே, ஷெவோன் டானியல், ஜனித் லியனகே, சாமிக கருணாரத்ன, மகேஷ் தீக்ஷன, டில்ஷான் மதுஷங்க, துஷ்மந்த சமீர, டுனித் வெல்லலாகே, பிரமோத் மதுஷன், அகில தனஞ்சய, வனிடு ஹசரங்க.

சென்னை

அமைச்சர் செந்தில்பாலாஜி

# மனு மீது 15ஆம் திகதி தீர்ப்பு



சட்ட விரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி அமுலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவரது பிணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது அமைச்சர் செந்தில் பாலாஜி, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், போக்குவரத்துக் கழகத்தில் வேலை வாங்கித் தருவதாக கூறி மோசடி செய்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் விசாரணை முடியும் வரை, சட்ட விரோத பணப்பரிமாற்ற வழக்கு தொடர்பான அமுலாக்கத்துறையின் விசாரணையை தள்ளிவைக்கக் கோரி அமைச்சர் செந்தில் பாலாஜி, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி முன்பு புதன்கிழமை (07) விசாரணைக்கு வந்தது. அப்போது செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மத்திய குற்றப்பிரிவு வழக்கில் செந்தில் பாலாஜி விடுவிக்கப்படும் பட்சத்தில் அமுலாக்கத்துறை வழக்கு செல்லாததாகிவிடும் என வாதிட்டார்.

மேலும், இந்த வழக்கு தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்ட ஆணவங்களின் விவரங்களை தங்களுக்கு வழங்கவில்லை என்றும் இந்த வழக்கில் ஆவணங்கள் திரிக்கப்பட்டுள்ளதாகவும் செந்தில் பாலாஜி தரப்பில் புகார் கூறப்பட்டது.

இதற்கு அமுலாக்கத்துறை தரப்பில், வழக்கின் விசாரணையை முடக்கி வைக்கும் நோக்கிலும், குற்றச்சாட்டு பதிவையும், சாட்சி விசாரணையையும் தாமதப்படுத்தும் நோக்கிலும் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணையை ஒத்திவைக்கக் கோரிய செந்தில் பாலாஜியின் மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என்றும் வாதிடப்பட்டது.

இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்ததையடுத்து வழக்கின் விசாரணையை தள்ளிவைக்க வேண்டும் என்று செந்தில் பாலாஜி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.



தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடர்:

# இறுதிப் போட்டியில் ஐவரி கோஸ்ட், நைஜீரியா

தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஐவரிகோஸ்ட், நைஜீரியா ஆகியன தகுதி பெற்றுள்ளன.

தம் நாட்டில் நடைபெற்று வரும் இத்தொடரில் நேற்று அதிகாலை நடைபெற்ற கொங்கோ ஜனநாயகக் குடியரசுடனான அரையிறுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு ஐவரி கோஸ்ட் தகுதி பெற்றுள்ளது.

ஐவரி கோஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை செபஸ்டியன் ஹாலர் பெற்றிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு தென்னாபிரிக்காவுடனான அரையிறுதிப் போட்டியில் வென்று இறுதிப் போட்டிக்கு நைஜீரியா தகுதி பெற்றிருந்தது. போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில், 4-2 என்ற ரீதியில் பெனால்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு நைஜீரியா தகுதி பெற்றிருந்தது.



ஆசியக் கிண்ணத் தொடர்:

# இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியன்கள் கட்டார்

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான கட்டார் தகுதி பெற்றுள்ளது.

தம் நாட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஈரானுடனான அரையிறுதிப் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்கு கட்டார் தகுதி பெற்றுள்ளது.

உத்தரகாண்ட்

‘அத்தை/மாமன் முறை மகன் – மகளை’

# திருமணம் செய்ய முடியாது

முறை பையன் / பொண்ணு சொந்தம் இன்றும் கிராம புறங்களில் பெரும் முக்கியத்துவம் வாய்த்த ஒரு உறவாக நீடிக்கிறது. சிறு வயதிலேயே இவருக்கு இன்னார் தான் என்ற வழக்கம் இப்பொழுது முற்பட்ட தமிழ் சமூகத்தில் இல்லாத நிலையிலும், சில இடங்களில் நீடிப்பதை நாம் காண முடிகிறது.

இந்நிலையில், இனி ‘அத்தை / மாமன் முறை மகன் - மகளை’ திருமணம் செய்ய முடியாது என்ற பொது சட்டம் அமலுக்கு வந்துள்ளது. நாட்டிலேயே முதல் மாநிலமாக உத்தரகாண்ட் மாநிலம் பொது சிவில் சட்டத்தை அமலுக்கு கொண்டு வந்த சட்டங்களில் சில மாற்றங்களை செய்துள்ளது. அதன் படி தான் தற்போது அம்மாநிலத்தில், இனி ‘அத்தை / மாமன் முறை மகன் - மகளை’ திருமணம் செய்ய முடியாது என்ற சட்டமும் அமலுக்கு வந்துள்ளது.

பாகிஸ்தான்

# இரட்டை குண்டு வெடிப்பு; 28 பேர் பலி

பாகிஸ்தானில் பாராளுமன்ற தேர்தல் வியாழக்கிழமை (08) நடைபெற்றது. கடந்த 1.5 வருட காலமாக அங்குப் பல இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் உள்ள பலூ சிஸ்தான் பிராந்தியத்தில், பிஷின் மாவட்டத்தில், சுயேட்சை வேட்பாளர் அஸ்ஃபந்த்யார் கான் ககர் என்பவரின் அலுவலகத்திற்கு வெளியே ஒரு சக்திவாய்ந்த குண்டு வெடித்துள்ளது.

“பொதுமக்கள் தேர்தலில் வாக்களிக்கச் செல்வதைத் தடுக்கும் வகையில்தான் இந்த குண்டு வெடிப்பு நடந்துள்ளது. இந்த குண்டு, அலுவலகத்திற்கு வெளியே வைக்கப்பட்டு ஒரு ‘ரிமோட்’ கருவியினால் இயக்கப்பட்டுள்ளது” என பலூசிஸ்தான் பொலிஸ் அதிகாரி அப்துல்லா ஜெஹ்ரி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்திற்கும் குறைவாக, அங்கிருந்து சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கில்லா சாயிஃப் உல்லா பகுதியில் மற்றொரு குண்டு வெடித்துள்ளது.

இந்த இரட்டை குண்டு வெடிப்பில் மொத்தமாக 28 பேர் பலியாகியுள்ளதுடன், 50 பேர் காயமடைந்துள்ளனர்.

தேர்தல் அமைதியாக நடக்க பாதுகாப்பு பலப்படுத்தப்படும் எனவும் தொடர்ந்து நடைபெறும் இச்சம்பவங்களுக்கு பின்னணியில் பிரிவினைவாதிகளும், பயங்கரவாதிகளும் உள்ளதாகவும் உள்துறை தெரிவித்துள்ளது.

ஜப்பான்

# ‘மிஸ் ஜப்பான்’ பட்டத்தை திரும்ப அளித்து பெண்

கடந்த ஜனவரி 22ஆம் திகதி அன்று ஜப்பானில் நடைபெற்ற ‘மிஸ் ஜப்பான்’ போட்டியில், கரோலினா ஷீனோ எனும் 26 வயது இளம் பெண் பட்டத்தை வென்றார்.

உக்ரைன் நாட்டில் பிறந்த கரோலினா, ஜப்பானிய மொழியில் சரளமாக எழுதவும் பேசவும் தெரிந்தவர். அவர் ஜப்பானிய பெண்ணை போன்றே இல்லை என்பதால் அழகி போட்டியில் அவருக்கு பிரதிநிதித்துவம் கிடைத்தது தவறு என பல்வேறு தரப்பினரும் இவரது வெற்றியை குறித்து கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், ஜப்பான் நாட்டு பத்திரிகை ஒன்றில் கரோலினாவிற்கு ஒரு திருமணமான ஆணுடன் உறவு இருந்ததாக செய்தி வெளிவந்தது.

இதை தொடர்ந்து தற்போது அழகி போட்டியை நடத்திய ‘மிஸ் ஜப்பான் சங்கம்’, பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட அந்த ஆண் திருமணமானவர் என முன்னரே அறிந்திருந்ததாகவும் அதை மறைத்த தவறை ஒப்பு கொண்ட கரோலினா தனது ‘மிஸ் ஜப்பான்’ பட்டத்தை திரும்ப அளித்து விட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து கரோலினா, “என்னால் விளைந்த சிக்கல்களுக்கும், என்னை நம்பியவர்களை ஏமாற்ற நேர்ந்ததற்கும் நான் வருத்தம் தெரிவிக்கிறேன்” என்றார்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய பும்ரா



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான 2ஆவது டெஸ்டில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானு எதிரான போட்டியில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இலங்கையின் பிரபாத் ஜெயசூரிய, ஒன்பதாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா, 3.இரவிச்சந்திரன் அஷ்வின், 4.பற் கமின்ஸ், 5.ஜொஷ் ஹேசில்வூட், 6.பிரபாத் ஜெயசூரியா, 7.ஜேம்ஸ் அன்டர்சன், 8.நேதன் லையன், இரவீந்திர ஜடேஜா, ஒலி றொபின்ஸன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

கேன் வில்லியம்சன், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. ஜோ றூட், 4.டரைல் மிற்செல், 5.பாபர் அஸாம், 6.உஸ்மான் கவாஜா, 7.விராட் கோலி, 8.ஹரி ப்ரூக், 9.திமுத் கருணாரத்ன, 10.மர்னுஸ் லபுஷைன்.

இந்நிலையில், மேற்குறிப்பிட்ட டெஸ்டில் 58 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இதே போட்டியில் 72 ஓட்டங்களைப் பெற்றதுடன், 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அக்ஸர் பட்டேல், ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ஷகிப் அல் ஹஸன், 4.பென் ஸ்டோக்ஸ், 5.அக்ஸர் பட்டேல்.

இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் அடம் ஸாம்பா, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேஷவ் மஹராஜ், 2.ஜொஷ் ஹேசில்வூட், 3.அடம் ஸாம்பா, 4. மொஹமட் சிராஜ், 5.ரஷீட் கான், 6.ஜஸ்பிரிட் பும்ரா, 7.ஷகீன் ஷா அஃப்ரிடி, 8.மொஹமட் நபி, மகேஷ் தீக்ஷன, 10.குல்தீப் யாதவ்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2.ஷுப்மன் கில், 3.கோலி, 4.றோஹித் ஷர்மா, 5.டரைல் மிற்செல், 6.டேவிட் வோர்னர், ஹரி டெக்டர், 8.டேவிட் மலன், 9.றஸி வான் டர் டுஸன், 10. ஹென்றிச் கிளாசென். முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாற், 1.ஷகிப் அல் ஹஸன், 2.மொஹமட் நபி, 3.சிகண்டர் ராசா, 4.ரஷீட் கான், 5.அசாட் வலா.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 09 பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.